**தொடக்கப் பள்ளிகளுக்கான கல்விச்சேமிப்பு உபகாரச் சம்பளங்கள்**

அன்பார்ந்த பெற்றோர்களே/பாதுகாவலர்களே,

சிங்கப்பூரரான எல்லாப் பிள்ளைகளுக்கும் சமமான கல்வி வாய்ப்புகளை வழங்கவும், பள்ளியில் கல்வியில் சிறந்து விளங்க மாணவர்களை ஊக்குவிக்கவும் அரசாங்கம் ஆண்டுதோறும் கல்விச்சேமிப்பு உபகாரச் சம்பளங்களை வழங்குகிறது. சிங்கப்பூரர்களான இந்த மாணவர்கள் பள்ளிப் பாடங்களில் சிறப்பான செயல்திறன் அல்லது நல்ல முன்னேற்றம் காட்டியிருப்பதோடு நன்னடத்தையும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். சாதனை, தலைமைத்துவ மற்றும் சேவை வெகுமதி, பிள்ளைகளின் தலைமைத்துவப் பண்புகள், சமூகத்துக்கும் பள்ளிகளுக்கும் பிள்ளைகள் ஆற்றிய சேவைகள், பாடஞ்சாரா நடவடிக்கைகளில் பிள்ளைகளின் சாதனைகள் ஆகியவற்றுக்கு அளிக்கப்படும் அங்கீகாரம் ஆகும். இந்தத் துண்டு ஏடு பலவகைக் கல்விச் சேமிப்பு உபகாரச் சம்பளங்களைப் பற்றிய தகவல்களைத் தருகிறது.

- கல்விச்சேமிப்பு உபகாரச் சம்பளம்
- கல்விச்சேமிப்பு தகுதிச்சிறப்பு உதவித்தொகை
- நல்ல முன்னேற்றத்திற்கான வெகுமதி
- சாதனை, தலைமைத்துவ மற்றும் சேவை வெகுமதி

**உபகாரச் சம்பளங்களுக்கான தகுதியும் அறிவிப்பும்**

| | **உபகாரச்சம்பளம்** | **தகுதிச்சிறப்பு உதவித்தொகை** | **நல்ல முன்னேற்றத்திற்கான வெகுமதி** | **சாதனை, தலைமைத்துவ மற்றும் சேவைக்கான கல்விச் சேமிப்பு வெகுமதி** |
|---|---|---|---|---|
| ***யாருக்கு?*** | தொடக்கநிலை 5 - 6 வகுப்புகளில் ஒவ்வொரு நிலையிலும் முதல் 10% க்குள் வருவதோடு நல்ல நடத்தையும் உள்ள பிள்ளைகள் | தொடக்கநிலை 1 - 6 வகுப்புகளில் ஒவ்வொரு நிலையிலும் முதல் 25% க்குள் வருவதோடு நல்ல நடத்தையும் மாதமொன்றுக்கு $4000க்கும் குறைவான மொத்தக் குடும்ப வருமானமும் உள்ள பிள்ளைகள் | தொடக்கநிலை 2 - 6 வகுப்புகளில் ஒவ்வொரு நிலையிலும் முதல் 10% க்குள் இருப்பவர்களில் தரநிலையில் நல்ல முன்னேற்றம் கண்டிருப்பதுடன் நல்ல நடத்தையும் உள்ள பிள்ளைகள் | மாணவர்களுக்கான தலைமைத்துவப் பண்புகளைப் பெற்றுள்ள தொடக்கநிலை 4-6 வகுப்புகளில் பயிலும் பிள்ளைகள் சமூகத்துக்கும் பள்ளிகளுக்கும் நல்ல சேவை ஆற்றுவதோடு பாடம் சாரா நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள். பிள்ளைகள் பள்ளித் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதோடு நன்னடத்தை உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். |
| ***எவ்வளவு?*** | முதல் 5% - $400<br>அடுத்த 5% - $350 | தொடக்கநிலை 1-3 - $200<br>தொடக்கநிலை 4-6 - $250 | தொடக்கநிலை 2-3 - $100<br>தொடக்கநிலை 4-6 - $150 | தொடக்கநிலை 4-6: $150 |
| ***அது எவ்வாறு அளிக்கப்படு கிறது?*** | உபகாரச் சம்பளத்துக்குத் தகுதியுள்ள மாணவர்களுக்குப் பள்ளிகள் தெரிவிக்கும். | • தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் அஞ்சல் வழியாக நவம்பர் இறுதியில் விண்ணப்பப் படிவத்தைப் பெறுவார்கள்.<br>• உங்கள் குடும்ப வருமானம் $4000 க்கும் குறைவாக இருந்தால், நீங்கள் விண்ணப்பப் படிவத்தை நிறைவுசெய்து, அதனை டிசம்பர் தொடக்கத்தில், உங்கள் வீட்டின் அருகே உள்ள சமூக நிலையத்தில்/மன்றத்தில் ஒப்படைக்கவும்.<br>• வெற்றிபெற்ற விண்ணப்பதாரர்களுக்கு டிசம்பரில் அஞ்சல் வழியாகத் தெரிவிக்கப்படும். | உபகாரச் சம்பளத்துக்குத் தகுதியுள்ள மாணவர்களுக்கு அஞ்சல் வழியாக டிசம்பர் நடுவில் தெரிவிக்கப்படும். | தகுதியுள்ள பிள்ளைகளைப் பள்ளிகள் தெரிவு செய்யும். விருதுபெறுபவர்களுக்கு டிசம்பர் நடுவில் அஞ்சல் வழியாகத் தகவல் தெரிவிக்கப்படும். |

உங்கள் மகன்/மகள் கல்வியிலும் பாடம் சாரா நடவடிக்கைகளிலும் வெற்றிபெற எங்கள் வாழ்த்துகள்.